WA **digital inclusion** project

# கணினித் திறன் பயிற்சி –இணைய-வழி அரசாங்க சேவைகள்

## சமூக வெற்றியாளர் திட்டம்

2025

lotterywest

wacoss wa council of social service

# பயிற்றுநருக்கான குறிப்புகள் : அரசாங்க சேவைகள்

- பங்குபற்றுநர்களுக்காக இந்தக் கையேடுகளை அச்சிட்டுக்கொள்ளுங்கள்:
  - ‘மை–கவ்’ (myGov) கையேடு (myGov handout)
  - ‘செண்ட்டர்லிங்க்’–ஐ ‘மை–கவ் (myGov)’– உடன் இணைத்தல்’ (Connecting Centrelink to myGov)
  - ‘ஏ.டீ.ஓ (ATO)’–ஐ ‘மை–கவ்’ (myGov) –உடன் இணைத்தல்’ (Connecting ATO to myGov)
  - ‘மெடிகெயர்’–ஐ ‘மை–கவ்’ (myGov) –உடன் இணைத்தல்’ (Connecting Medicare to myGov)
  - ‘என் சுகாதாரப் பதிவு (My Health Record)’–ஐ ‘மை–கவ்’ (myGov) –உடன் இணைத்தல்’ (Connecting My Health Record to myGov)
  - இந்தப் பக்கத்தில் இருந்து நீங்கள் இணைக்க விரும்பும் வேறு சேவைகள் எதுவும்.
- இந்தப் பாடத்தை அளிக்கும் பொழுது உங்களுடைய பயன்பாட்டிற்காக இந்த ஒளித்–தகடுகளின் பிரதி ஒன்றை, குறிப்புகள் உள்ள பகுதியுடன் அச்சிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- வாசியுங்கள்:
  - இந்த ஒளித்–தகடுகளை வாசித்து அவற்றில் அடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பரிச்சியமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்,
  - பங்குபற்றுநர்களுக்கான கையேட்டினை வாசியுங்கள்.
- உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், அமர்விற்கு முன்பாக ‘எலியட்’ அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள் Elliot@wacoss.org.au
- காட்சிப்படுத்துவதற்கு முன்பாக இந்த ஒளித்–தகட்டினை அகற்றுங்கள்/ மறைத்துவையுங்கள்.
- கடைசி ஒளித்தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம்/ திகதியைப் புதுப்பியுங்கள்
- இருந்தால் இந்தப் படங்களில் எதற்கும் பதிலாக அவற்றை நீங்கள் பாவிக்கலாம்.
- உங்களுடைய அமர்வில் உள்ளவர்களை உங்களுக்குத் தெரியும், ஆகவே, ‘என் –அடையாளம்’ (‘மை–ஐடீ’(myID)) என்ற பகுதியை நீங்கள் விரும்பினால் நீக்கிவிடலாம்.

# இந்த நாட்டு பூமிக்காக பூர்வ பழங்குடியினருக்கு நன்றி நவிலல்

ஆபோரிஜினிப் பூர்வகுடி மக்களது நிலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமறிவோம். இந்த நிலங்களைச் சேர்ந்த ஆபொரிஜினி மக்களுக்கு நாங்கள் மதிப்பு–மரியாதை செலுத்துகிறோம். ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் பல ஆண்டுகளாக இந்த நிலத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர்.

ஆபொரிஜினிப் பூர்வகுடிகள் அனைத்தொர்ரையும் அவர்களது மூத்தொர்களையும் நாங்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

அவர்களது கதைகளிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள இயலுமானது ஏராளமாகும்.

இந்த பூமி எப்போதுமே ஆபொரிஜினிப் பூர்வகுடியினருடையதாகவே இருந்துவந்திருக்கிறது, இனியும் அவ்வாறே நீடிக்கும்.

# இணைய-வழி அரசாங்க சேவைகள்

WA Digital Inclusion Project

# அறிமுகங்கள்

- குழுவினருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்
- இணைய-வழி அரசாங்க சேவைகளைப் பற்றி உங்களுக்குள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்



# அமர்வின் மேலோட்டம்

பின் வருவனவற்றை இந்த அமர்வு உள்ளடக்கும்:

- 'மை-கவ்' (myGov) உள்ளடங்க, இணைய-வழி அரசாங்க சேவைகள் என்றால் என்ன
- 'மை-கவ்' (myGov) கணக்கு ஒன்றை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது,
- 'மை-கவ்' (myGov)-உடன் சேவைகளை இணைத்தல், மற்றும்
- தேவைப்பட்டால் நீங்கள் எங்கிருந்து உதவி நாடலாம்.

# ‘மை–கவ்’ (myGov) என்பது என்ன?

- ‘மை–கவ்’ (myGov) என்பது இணைய–வழியில் அரசாங்க சேவைகளை அணுகிப் பெறுவதற்கானதொரு பாதுகாப்பான வழியாகும்.
- ‘செண்ட்டர்லிங்க்’, ‘மெடிகெயர்’ மற்றும் ‘ஏ.டீ.ஓ’ (ATO) போன்ற சேவைகளை உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைக்க இது ஏது செய்யும். உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்கிற்குள் சென்று, ஒரே இடத்தில் இந்த சேவைகளை நீங்கள் அணுகிப் பெறலாம்.

# ‘மை-கவ்’ (myGov) கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்

‘மை-கவ்’ (myGov) கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள, மின்னஞ்சல் முகவரி ஒன்றும் ‘மொபைல்-ஃபோன்’ பாவிக்கும் வசதியும் உங்களுக்குத் தேவைப்படும்.

‘மை-கவ்’ (myGov) கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான படி-நிலைகள், இதோ:

1. ‘மை-கவ்’ (myGov)–இற்குச் சென்று ‘கணக்கு உருவாக்கம்’ (Create Account) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
2. ‘மின்னஞ்சலைக் கொண்டு தொடர்க’ (Continue with Email) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
3. ‘தகவல் பாதுகாப்பு அறிவிப்பு மற்றும் பயன்பாடு குறித்த நியமங்கள் மற்றும் நிபந்தனைகள்’ –ஐ வாசியுங்கள்., பிறகு ‘அடுத்து’ (Next) –ஐத் தெரிவுசெய்யுங்கள்.
4. மின்னஞ்சல் முகவரி ஒன்றை உள்ளிடுங்கள், பிறகு ‘அடுத்து’ (Next) –என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
5. உங்களுடைய மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள ‘குறியீடு’ (Code)–ஐ உள்ளிடுங்கள், பிறகு ‘அடுத்து’ (Next) –ஐத் தெரிவுசெய்யுங்கள்
6. உங்களுடைய ‘மொபைல் ஃபோன்’ இலக்கத்தினை உள்ளிடுங்கள் (இது உங்கள் விருப்பம்), பிறகு ‘அடுத்து’ (Next) –ஐத் தெரிவுசெய்யுங்கள்.
7. உங்களுடைய ‘மொபைல் ஃபோன்’ மூலம் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள ‘குறியீடு’ (Code)–ஐ உள்ளிடுங்கள், பிறகு ‘அடுத்து’ (Next) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
8. கடவுச்சொல் ஒன்றை உள்ளிடுங்கள், பிறகு கடவுச்சொல்லை மீண்டும் ஒரு முறை உள்ளிடுங்கள்.
9. உங்களுக்கான 3 இரகசியக் கேள்விகளையும் அவற்றிற்கான பதில்களையும் உருவாக்குங்கள். தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெரிவுசெய்யுங்கள், அல்லது உங்களுக்கே சொந்தமானவற்றை உருவாக்குங்கள்.
10. மேலதிகத் தகவல்கள்: https://my.gov.au/en/about/help/mygov-website/create-mygov-account

# சேவைகளை இணைத்தல்

myGov

My Health Record

medicare

ato

centrelink

# ‘மை-கவ்’ (myGov) கணக்கு ஒன்றுடன் ‘சென்ட்டர்லிங்க்’-ஐ இணைத்தல்

- ‘சென்ட்டர்லிங்க்’-ஐ நீங்கள் எப்படி இணைப்பீர்கள் என்பது, ‘வாடிக்கையாளர் சுட்டு இலக்கம்’ (Customer Reference Number) ஒன்று உங்களுக்கு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பொறுத்து அமையும்.
- இவற்றை எவ்வாறு இணைப்பது என்பதைப் பற்றிய தகவல்களைக் காண இந்தக் கையேட்டினைப் பாருங்கள், அல்லது பின்வரும் வலைப்பக்கத்திற்குச் செல்லுங்கள்:

https://my.gov.au/en/about/help/mygov-website/link-services-to-your-account/link-centrelink

# ‘மை-கவ்’ (myGov) கணக்கு ஒன்றுடன் ‘சென்ட்டர்லிங்க்’-ஐ இணைத்தல்

‘சென்ட்டர்லிங்க்’-ஐ உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் இணைக்கும் பொழுது உங்களால் பின் வருவனவற்றைச் செய்ய இயலும்:

- உங்களுடைய ‘சென்ட்டர்லிங்க்’ சுட்டு இலக்க (Centrelink Reference Number (CRN))-த்தினைத் தெரிந்துகொள்ளல்,
- கொடுப்பனவுக் கோரிக்கை ஒன்றை விடுத்தல்,
- உங்களுடைய கோரிக்கையின் முன்னேற்றத்தைத் தொடரல்,
- ஆவணங்களை வலையேற்றம் செய்தல்,
- உங்களுடைய வருமானத்தை அறிவித்தல்,
- உங்களைப் பற்றிய விபரங்களை ‘சென்ட்டர்லிங்க்’ உடன் நிர்வகித்தல்.

# ‘ஏ.டீ.ஓ- (ATO)-வை உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

1. ‘மை-கவ்’ (myGov)-இற்குள் செல்லுங்கள்
2. **‘சேவைகளைப் பாருங்கள் மற்றும் அவற்றை இணையுங்கள்’ (View and Link Services) என்பதன் மீது சொடுக்குங்கள்**
3. ATO-விற்கு அடுத்துக் காணப்படும் **Link** என்பதைத் தெரிவு செய்யுங்கள்
4. உங்களைப் பற்றிய தகவல்களை உள்ளிடுங்கள் – ‘மதிப்பீட்டு அறிவிப்பு’ (Notice of Assessment) ஒன்றும் உங்களுடைய ‘வரி கோப்பு இலக்க’(Tax File Number )மும் உங்களுக்குத் தேவைப்படக்கூடும்.

மேலதிகத் தகவல்கள்: https://my.gov.au/en/about/help/mygov-website/link-services-to-your-account/link-the-australian-taxation-office

# ‘ஏ.டீ.ஓ’ (ATO)-வை உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் ATO -வை இணைக்கும் பொழுது உங்களால் பின் வருவனவற்றைச் செய்ய இயலும்:

- உங்களைப் பற்றிய மற்றும் உங்களுடைய வேலையைப் பற்றிய விபரங்களை நிர்வகிக்க,
- உங்களுடைய வரியைப் பற்றிய தகவல்களைப் பார்க்க,
- உங்களுடைய வரி எவ்வளவு என்பதைச் சமர்ப்பித்து அதைச் செலுத்த,
- ‘சூப்பர்’ எனப்படும் உங்களுடைய ஓய்வூதியத் தொகையைப் பார்க்க, நிர்வகிக்க மற்றும் அதை அணுகிப் பெற,
- உங்களுடைய படிப்பிற்கான மாணவர் கடன் எவ்வளவு என்று பார்க்க,
- ‘ஒற்றை வர்த்தகர்’ (sole trader) என்ற வகையில் உங்களுடைய சமர்ப்பிப்புகளை நிர்வகிக்க.

# ‘மெடிகெயர்’ (Medicare)-ஐ உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

- உங்களுடைய ‘மெடிகெயர்’ அட்டை இலக்கம் உங்களுக்குத் தேவைப்படும்.
- ‘மெடிகெயர்’ (Medicare)-ஐ ‘மை-கவ்’ (myGov) கணக்குடன் இணைக்க உங்களைக் குறித்த சில கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும்.
- மேலதிகத் தகவல்கள்:

[https://my.gov.au/en/about/help/mygov-website/link-services-to-your-account/link-medicare](https://my.gov.au/en/about/help/mygov-website/link-services-to-your-account/link-medicare)

# ‘மெடிகெயர்’ (Medicare)–ஐ உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

- ‘மை–கவ்’ (myGov)–இற்குள் செல்லுங்கள்
- **‘சேவைகளைப் பாருங்கள் மற்றும் அவற்றை இணையுங்கள்’ (View and Link Services) என்பதன் மீது சொடுக்குங்கள்**
- ‘மெடிகெயர்’ என்ற கட்டத்தை அடுத்துக் காணப்படும் **‘இணைப்பு’ (Link)** என்பதைத் தெரிவு செய்யுங்கள்
- உங்களைப் பற்றிய விபரங்கள் ஏற்கனவே ‘மை–கவ்’ (myGov)–இல் பதியப்பட்டிருந்தால், உங்களுடைய ‘மெடிகெயர்’ பதிவுடன் அவை ஒத்துப்போவதாக இருக்கவேண்டும். ‘தொடர்க’ (Continue) என்பதைத் தெரிவு செய்யுங்கள். ‘மெடிகெயர்’–ஐ நீங்கள் முதல் முறையாக இணைக்கிறீர்கள் என்றால், உங்களைப் பற்றிய தகவல்களை ‘மை–கவ்’ (myGov) இருப்பில் வைத்துக்கொள்வதற்கு நீங்கள் சம்மதம் அளிக்கவேண்டியிருக்கும். ‘நான் சம்மதிக்கிறேன்’ (I agree) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
- உங்களுடைய ‘மெடிகெயர்’ அட்டை விபரங்கள், அல்லது ‘இணைப்புக் குறியீடு’ (linking code) ஒன்றைப் பாவித்து உங்களுடைய ‘மெடிகெயர்’–ஐ நீங்கள் இணைக்கலாம். உங்களுக்கு ஏற்ற தெரிவைத் தேர்ந்தெடுங்கள், பிறகு ‘அடுத்து’ (Next) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
- உங்களுடைய ‘மெடிகெயர்’ அட்டை இலக்கம் மற்றும் உங்களைப் பற்றிய விபரங்கள் அல்லது உங்களுடைய ‘இணைப்புக் குறியீ’(linking code)ட்டினை உள்ளிடுங்கள். ‘அடுத்து’ (Next) என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.

# ‘மெடிகெயர்’ (Medicare)-ஐ உங்களுடைய ‘மை-கவ்’ (myGov)-உடன் இணைக்கும் பொழுது உங்களால் என்ன செய்ய இயலும்

‘மெடிகெயர்’ (Medicare)-ஐ உங்களுடைய ‘மை-கவ்’ (myGov)-கணக்குடன் இணைத்த பிறகு உங்களால்:

- கோரிக்கை ஒன்றை விடுக்க இயலும்
- ‘மெடிகெயர்’ அட்டை ஒன்றைப் பெற இயலும்
- உங்களுடைய ‘மெடிகெயர்’ அட்டையில் ஒருவரைச் சேர்க்க அல்லது அதிலிருந்து ஒருவரை நீக்க இயலும்
- உங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பிக்க இயலும்
- கோரிக்கைகளின் வரலாறு மற்றும் உங்களுடைய அறிவிப்புகள் ஆகியவற்றைப் பார்க்க இயலும்.

# ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

பின் வருவனவற்றைப் போன்ற, உடல் நலத்தைப் பற்றிய முக்கியமான தகவல்களை நீங்கள் அணுகிப் பெற ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record ) ஏது செய்யும்:

- ஒரே இடத்தில், தடுப்பூசிகள் மற்றும் நோயியல் உள்ளடங்க, உங்களைப் பற்றிய ‘கோவிட்–19’ தகவல்கள்
- நோயியல் மற்றும் ‘எக்ஸ்–ரே’ பட அறிக்கைகள்
- பரிந்துரைக்கப்பட்ட, மற்றும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளைப் பற்றிய தகவல்கள்
- மருத்துவமனையிலிருந்து நீங்கள் வீட்டிற்கு அனுப்பப்படும் பொழுது கொடுக்கப்படும் மருத்துவ சாராம்சங்கள்.

# ‘மெடிகெயர்’ விபரங்களைப் பாவித்து ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

1. ‘மை–கவ்’ (myGov)–இற்குள் செல்லுங்கள்
2. **‘சேவைகளைப் பாருங்கள் மற்றும் அவற்றை இணையுங்கள்’ (View and Link Services) என்பதன் மீது சொடுக்குங்கள்**
3. ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) எனும் கட்டத்தில் உள்ள ‘Link’ என்பதைத்–ஐத் தெரிவு செய்யுங்கள்.
    - ‘மெடிகெயர்’–ஐ நீங்கள் ஏற்கனவே இணைத்திருந்தால், உங்களுடைய ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ இணைக்க உங்களுடைய ‘மெடிகெயர்’ விபரங்களை நாங்கள் பாவிப்போம். ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ இணைக்க ‘Continue’ என்பதைத் தெரிவு செய்து கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
    - ‘மெடிகெயர்’–ஐ நீங்கள் ஏற்கனவே இணைத்திருக்காதிருந்தால், உங்களுடைய ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ இணைக்க உங்களுடைய அடையாளத்தை நீங்கள் உறுதிபடுத்தவேண்டியிருக்கும்.
    - பின் வரும் படி–நிலைகளைப் பின்பற்றுங்கள்:
4. ‘என் ‘மெடிகெயர்’ பதிவைப் பயன்படுத்துக’ (Use my Medicare record) என்பதைத் தெரிவு செய்து, ‘Continue’ என்பதைத் தெரிவு செய்யுங்கள். உங்களுடைய ‘மெடிகெயர்’ அட்டை இலக்கம் உங்களுக்குத் தேவைப்படும், அத்துடன் உங்களைப் பற்றிய குறிப்பான சில கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும். பிறகு, ‘அடுத்து’ (Next) என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

myGov

My Health Record

# ‘அடையாள சரிபார்ப்புக் குறியீடு’ (Identity Verification Code )–ஐப் பாவித்து ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைத்தல்

1. நீங்கள் ‘மெடிகெய’ருக்குத் தகுதி பெறாதவர் என்றால், அல்லது ‘ஃபோன்’ மூலமாக உங்களுடைய அடையாளத்தை நீங்கள் உறுதிப்படுத்த விரும்பினால், ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)–ஐ உங்களுடைய ‘மை–கவ்’ (myGov) கணக்குடன் இணைப்பதற்கு ‘அடையாள சரிபார்ப்புக் குறியீடு’ (Identity Verification Code ) ஒன்றை நீங்கள் பாவிக்கலாம்.
2. குறியீடு ஒன்றைப் பெற, ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) உதவித் தொலைபேசி இணைப்பினை 1800 723 471–இல் அழையுங்கள்.
3. ‘அடையாள சரிபார்ப்புக் குறியீடு’ (Identity Verification Code) ஒன்றை நீங்கள் பெற்றதும் பின் வரும் படி–நிலைகளைப் பின்பற்றுங்கள்.

- ‘மை–கவ்’ (myGov)–இற்குள் செல்லுங்கள்.
- ‘சேவைகளைப் பாருங்கள் மற்றும் அவற்றை இணையுங்கள்’ (View and Link Services) என்பதன் மீது சொடுக்குங்கள்.
  - ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) எனும் கட்டத்தில் உள்ள ‘Link’–என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
  - ‘என் அணுகல் குறியீட்டைப் பயன்படுத்துக’ (Use my access code) என்பதைத் தெரிவு செய்யுங்கள், அடுத்து ‘தொடர்க’ (Continue) என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
  - உங்களுடைய ‘அடையாள சரிபார்ப்புக் குறியீடு’ (Identity Verification Code), குடும்பப் பெயர் மற்றும் பிறந்த திகதி ஆகியவற்றை உள்ளிடுக. பிறகு ‘அடுத்து’ (Next) என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

# ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)-ஐப் பாவித்தல்

நீங்களும், உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர்களும் உங்களுடைய ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record)-ஐ ப் பின் வரும் நோக்கங்களுக்காகப் பாவிக்கலாம்:

- உங்களுடைய மருந்துகள் என்ன என்று பார்க்க,
- உங்களுடைய பதிவில் உள்ள உங்களைப் பற்றிய மருத்துவத் தகவல்களை நிர்வகிக்க,
- உங்களுடைய முழு தடுப்பூசி வரலாற்றைப் பெற,
- உங்களுடைய நோய்நிலைகள் மற்றும் ‘எக்ஸ்-ரே’ படங்களின் அறிக்கைகளைப் பார்க்க,
- உங்களைப் பற்றிய தகவல்களில் மேலும் தகவல்களைச் சேர்க்க, அல்லது புதுப்பிக்க,
- உங்களை குழந்தையின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்துவர,
- உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) மின்னஞ்சல் பெட்டிக்கு அனுப்பப்பட்டுள்ள செய்திகளைப் பெற.

# ‘மை-ஐடி’ (myID) (என்-அடையாளம்)

‘2 நிலை உறுதிப்பாடு’ (2-factor authentification) ஒன்றைக் கொண்டு, ‘மை-ஐடி’ (myID) ஐப் பாவித்து ‘மை-கவ்’ (myGov) –ஐப் பாதுகாப்பாக அணுகும் வழி

உங்களுக்கான ‘மை-ஐடி’ (myID) ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள உங்களுக்குத் தேவைப்படுவன:

- **உங்களுக்கு சொந்தமான ‘ஸ்மார்ட்’ சாதனம் ஒன்று.** ‘மை-ஐடி’ (myID) செயலி என்பது பெரும்பான்மையான ‘ஸ்மார்ட்’ சாதனங்களுக்கு ஏற்றவையாக இருக்கும். இந்த செயலி ‘ஆப்பிள் ஸ்டோர்’ அல்லது ‘கூகுள் ப்ளே’-யில் இருந்து மட்டுமே கிடைக்கும்.
- **உங்களுக்கு சொந்தமான மின்னஞ்சல் முகவரி ஒன்று** இது உங்களுக்கே சொந்தமான மின்னணு அடையாளம் என்பதால், உங்களுடைய அடையாள ஆவணங்கள் நீங்கள் தெரிவு செய்யும் மின்னஞ்சல் முகவரியுடன் இணைக்கப்படும். இதை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளக்கூடாது, அத்துடன் இது உங்களுடைய வேலைக்கான மின்னஞ்சலாக இருக்கக்கூடாது.
- **நீங்கள் 15 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.** இணைய-வழியிலான சில அரசாங்க சேவைகளைப் பாவிக்க சில கட்டுப்பாடுகளும் செல்லுபடியாகக்கூடும்.

# ‘மை-ஐடி’ (myID)-யை ஏற்படுத்திக்கொள்ளல்

3 படி-நிலைகள்:

1. ‘ஆப்-ஸ்டோர்’ (App Store) அல்லது ‘கூகுள் ப்ளே’ (Google Play)-யில் இருந்து உங்களுடைய ‘ஸ்மார்ட்’ சாதனத்திற்கு ‘மை-ஐடி’ (myID) செயலியை இறக்கம் செய்துகொள்ளுங்கள். வேறெங்கும் இருந்து இதை இறக்கம் செய்யாதீர்கள்
2. உங்களைப் பற்றிய விபரங்களை உள்ளிடுங்கள்
3. உங்களுடைய அடையாளத்திற்கான வலு என்ன என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

# ‘மை-ஐடீ’ (myID)-யைப் பாவித்தல்

‘மை-ஐடீ’ (myID) மற்றும் உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) ஆகிய இரண்டும் வெவ்வேறானவை.

‘மெடிகெயர்’ மற்றும் ‘ஏடீஓ’ (ATO) போன்ற அரசாங்க சேவைகளை அணுகிப் பாவிக்க உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்கு உங்களை அனுமதிக்கும்.

‘மை-ஐடீ’ (myID) என்பது ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் மின்னணு அடையாள செயலியாகும். ‘மை-கவ்’ (myGov) போன்ற இத் திட்டத்திலுள்ள பல்வேறு இணைய-வழி அரசாங்க சேவைகளுக்குள் நுழைய இந்த செயலியை நீங்கள் பாவிக்கலாம்.

‘மை-ஐடீ’ (myID) செயலியைப் பயன்படுத்தி உங்களுடைய (myGov) கணக்கையோ, உங்களுடைய மின்னஞ்சல் பெட்டியையோ உங்களால் பார்க்க இயலாது.

‘மை-ஐடீ’ (myID) செயலியைப் பயன்படுத்தி உங்களுடைய (myGov) கணக்கிற்குள் நீங்கள் நுழையும் பொழுது, 4-இலக்கக் குறியீடு ஒன்றை நீங்கள் உங்களுடைய ‘மை-ஐடீ’ (myID) செயலிக்குள் இடவேண்டியிருக்கும், அல்லது அந்தக் குறியீட்டினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுடைய ‘மை-கவ்’ (myGov) கணக்கிற்கான பயனர் பெயர், கடவுச்சொல் மற்றும் பாதுகாப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இது அமைகிறது.

‘மை-கவ்’ (myGov) -இற்குள் நுழைந்து அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சேவைகளைப் பாவிக்க ‘மை-ஐடீ’ (myID) செயலியை நீங்கள் பயன்படுத்தலாம்.

# உபயோகமான வளங்கள் மற்றும் மேலதிக உதவி



- ‘மை-கவ்’ (myGov) கையேடு (myGov handout)
- ‘செண்ட்டர்லிங்க்’-ஐ ‘மை-கவ் (myGov)உடன் இணைத்தல் –(Connecting Centrelink to myGov)
- ‘ஏடீஓ (ato)’-ஐ ‘மை-கவ் (myGov)உடன் இணைத்தல் (Connecting ato to myGov)
- ‘மெடிகெயர்’-ஐ ‘மை-கவ் (MyGov)உடன் இணைத்தல் (Connecting medicare to myGov)
- ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Recoed)’-ஐ ‘மை-கவ் (MyGov)உடன் இணைத்தல் (Connecting My Health Record to myGov)
- இந்தப் பக்கத்திலிருந்து உங்களுக்குத் தேவைப்படக்கூடிய வேறெந்த இணைப்பு சேவைகளும்

# அமர்வைப் பற்றிய மீள்பார்வை

உங்களுடைய அரசாங்க சேவைகளையும், உங்களைப் பற்றிய உடல்நலத் தகவல்களையும் நிர்வகிக்க ‘மை–கவ்’ (myGov), ‘என் சுகாதாரப் பதிவு (My Health Record) மற்றும் ‘மை–ஐடீ’ (myID) ஆகியன உதவுகின்றன.

உங்களுடைய உள்–நுழைவு விபரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

‘மை–ஐடீ’ (myID)–யை நீங்கள் பாவித்தால், மற்ற யாருக்கும் தெரியாத கடவுச்சொல்லை உங்களுடைய ‘ஃபோன்’ கொண்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

# நன்றி!

அடுத்த அமர்விற்கான நேரம்:

WA
# digital inclusion
project

## நன்றி

## சமூக வெற்றியாளர் திட்டம்

*எழுத்துரையைச் சேர்க்க, சொடுக்குங்கள்*

lotterywest

wacoss wa council of social service